©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 27, 2013
மாசி 15, நந்தன, திருவள்ளுவர் ஆண்டு—2044

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (2D) எண். 25, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை, 12 ஜூலை 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதியின்படியும் வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் வரைவு, அறிக்கை, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெறுமாயின் அதனை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் இருப்பின் அதனை, சென்னை—600 006—ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையில் உருவாகி 15-06-2008 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம்-II, பிரிவு 2 இல், 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./286/(b)/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தும், அதற்கு பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், யாதொரு பயிரிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு, அதாவது தமிழ்நாடு மாநிலத்தில் சின்கோனா, ரப்பர், தேயிலை, காபி அல்லது ஏலக்காய் பயிரிடும் வேலையில் ஈடுபட்டுள்ள கீழே (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விரவ அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## மலைத்தோட்டத்தில் வேலைவாய்ப்பு.

| *பணியாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|
| | *கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சின்கோனா தோட்டங்கள்* | *காபி மற்றும் ஏலக்காய் தோட்டங்கள்* | *கன்னியாகுமரி மாவட்டத்தில் தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்கள்* |
| *(1)* | | *(2)* | |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| பெரியவர்கள் | 90.00 | 88.50 | 94.00 |
| வளரிளம் பருவத்தினர் | 61.00 | 60.50 | 64.00 |

**விளக்கங்கள்:—**

**அகவிலைப்படி:**—மேற்சொன்ன குறைந்தளவு ஊதிய வீதங்கள், சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டெண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளன. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், மேற்சொன்ன மலைத்தோட்டங்களில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

உரிய வயதடைந்த பணியாளர்கள்—நாளொன்றுக்கு 18 காசு.

வளரினம் பருவப் பணியாளர்கள்—நாளொன்றுக்கு 12 காசு.

(b) அகவிலைப்படி, சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டெண்ணின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் முறையே, ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களின் முதல் நாளிலும் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு) முந்தைய இரண்டாவது காலாண்டின் தொடக்கத்தில் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் ஆகிய திங்களின் முதல் நாட்களிலும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

**2.** இரப்பர் தோட்டங்களில், இரப்பர் பால் வடித்தெடுக்கும் பணியாளர்களுக்கான செய்யும் வேலைக்கேற்ற குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்

(a) உத்தரவாதமளிக்கப்பட்ட கால அளவு—நாளொன்றுக்கு ரூபாய் 47.20

(b) செய்யும் வேலைக்கேற்ற குறைந்தளவு ஊதிய வீதங்கள்.

வகை-I: (ஏக்கர் ஒன்றிற்கு 113 கிலோ வரை விளைச்சல்—ஆண்டொன்றிற்கு 0.404686 ஹெக்டேர்) முதல் 1½ கிலோ உலர் இரப்பருக்கு, அரை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15.73.

வகை-II: (ஏக்கர் ஒன்றிற்கு 113 கிலோகிராமிற்கு அதிகமாகவும் 181 கிலோ கிராம் வரை விளைச்சல்—ஆண்டொன்றிற்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $2^1/_2$ கிலோ உலர் இரப்பருக்கு, அரை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 9.44.

வகை-III: (ஏக்கர் ஒன்றிற்கு 181 கிலோகிராமிற்கு மேல் 272 கிலோ கிராம் வரை விளைச்சல்—ஆண்டொன்றிற்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $4^1/_2$ கிலோ உலர் இரப்பருக்கு, அரை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.24.

வகை-IV: (ஏக்கர் ஒன்றிற்கு 272 கிலோகிராமை விட அதிக விளைச்சல்—ஆண்டொன்றிற்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $6^1/_2$ கிலோ உலர் இரப்பருக்கு, அரை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.63.

(c) இந்த அகவிலைப்படி, ஏனைய கால வீதத்திலான இரப்பர் தோட்டப் பணியாளர்களுக்குப் பொருந்தும்.

**3.** ஒரே பணியை அல்லது ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**4.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

ந. அருள்,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*(அரசாணை (2டி) எண் 50, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(J1)த் துறை, 5 அக்டோபர் 2012.*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 08—07—2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பிரிவு 2 இல் 220 மற்றும் 221 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./346/2009 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், பட்டு முறுக்கேற்றும் தொழிலில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணிகளுக்கு / பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## பட்டு முறுக்கேற்றும் தொழிலில் வேலை

| *தொடர் எண்* | *பணி/பணியாளர்களின் வகைகள்* | | *குறைந்தஅளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | | *(3)* |
| | | | *ரூ. காசு.* |
| 1 | நூல் இழைத்தல் | நாளொன்றுக்கு | 112.00 |
| 2 | மடித்தல் | | |
| 3 | சுற்றுதல் | நாளொன்றுக்கு | 113.00 |
| 4 | முறுக்கேற்றுதல் | | |
| 5 | பாவு போடுதல் | நாளொன்றுக்கு | 120.00 |
| 6 | மேலாள்/எழுத்தர் | மாதமொன்றுக்கு | 3453.00 |
| 7 | நிருவாக உதவியாளர் | மாதமொன்றுக்கு | 3855.00 |

***விளக்கங்கள்:*—1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு கூடுதலாக 23 காசுகள் (இருபத்து மூன்று காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**3.** நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை **26**ஆல் வகுக்க வேண்டும்.

**4.** மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை **30**ஆல் பெருக்க வேண்டும்.

**5.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

ந. அருள்,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.